**மாந்தை மேற்கு பிரதேச சபை**

**மன்னார் மாவட்டம்**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2016 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2017 மார்ச் 30 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மார்ச் 30 ஆந் திகதியும் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. ஆண்டிற்கான கணக்காய்வளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 யூலை 18 இல் சபையின் செயலாளருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட தாக்கத்தினைத் தவிர்த்து மாந்தை மேற்கு பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதி சார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுகள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

2015 ஆம் ஆண்டுக்கான 02 கொடுப்பனவுகளின் கூட்டு மொத்தத் தொகை ரூபா 19,320 நடைமுறையாண்டின் செலவாகக் காட்டப்பட்டமையால் செலவிலும் கூடிய வருமானம் ரூபா 19,320 ஆல் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது.

#### 1.3.2 செலுத்தவேண்டிய நிலுவைகள்

மீளாய்வாண்டின் கணக்கறிக்கையின் படி 31/12/2016 இல் ரூபா 10,816,113 செலுத்த வேண்டியிருந்த போதிலும் 10/06/2017 வரை ரூபா 4,789,293 வரை செலுத்தித் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.3 சட்டங்கள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்கள் பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| | சட்டம், விதி, பிரமாணம் என்பவற்றுக்கான தொடர்பு<br>---------------------------------- | இணங்காமை<br>---------------- |
|---|---|---|
| (அ) | 1988 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி, நிர்வாக ஒழுங்குவிதிகள் | |
| | (i) விதி இலக்கம் 59 | ஒவ்வோரு ஆண்டின் தொடக்கத்திலும் வருமான பரிசோதகர் மற்றும் வருமான மேற்பார்வையாளர் அல்லது தலைவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் வேறு உத்தியோகத்தர் சபைப் பிரதேசத்தில் கணிப்பீடொன்றை மேற்கொண்டு 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச்சட்டத்தின் 150(1) ஆம் பிரிவிற்கு அமைவாக வியாபாரங்கள் பற்றிய நிரல் ஒன்றைத் தயாரிக்கப்பட்டிருக்காமையால் வியாபார வரிகள் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) விதி இலக்கம் 178(3) | பொருட்களினை வழங்குவதற்கான நிறுவனங்களின் நிரல் ஒன்றினை சபை தயாரித்திருக்கவில்லை. |
| | (iii) விதி இலக்கம் 218 | காணிகள் கட்டடங்கள் யாவும் ஒவ்வோராண்டும் ஆகக் குறைந்தது ஒரு முறை செயலாளரினால் சோதனை செய்விக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | இலங்கை சோசலிசகுடியரசின் நிதி ஒழுங்குவிதி | |
| | (i) நிதி ஒழுங்குவிதி 104 | அடம்பன் விளையாட்டு மைதான முன்னேற்ற வேலை – 2015 தொடர்பான 2015 ஆம் ஆண்டு கணக்காய்வு ஐயவினாவினால் ரூபா 160,700 மேலதீகக் கொடுப்பனவு சீர்செய்யப்பட்ட போதிலும் இந்நட்டத்தில் தொடர்புடைய அலுவலர்களிற்கு சபையினால் எதுவித நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) 371 பிரிவு 2 (ஆ), பிரிவு 5 | உபகட்டு நிதியாக ஒவ்வொரு தனிப்பட்ட சந்தர்ப்பத்திலும் ரூபா 20,000 ரூபாவிற்கு மேற்படாமல் வழங்கப்படுதல் வேண்டும். மேலும் வழங்கப்பட்ட முற்பணமானது குறித்த தேவை நிறைவு செய்தவுடன் தீர்வு செய்யப்படல் வேண்டும். இருந்தபோதிலும் 16 சந்தர்ப்பங்களில் இந் நடைமுறையானது மீறப்பட்டுள்ளது. |
| | (iii) 571 | காலம் கடந்த வைப்புகளின் பெறுமதி ரூபா 3,878,757 கூட்டுத்தொகையான வைப்புகளைக் கொடுத்து தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி 2016 திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செயற்பாடுகளின் பெறுபேறு மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமான மிகையாக ரூபா 2,063,607 ஆக விளைந்திருந்ததுடன் ஒப்பிடும்போது நேரொத்த முன்னைய ஆண்டில் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமான மிகையாக ரூபா 3,225,215 ஆக விளைந்திருந்தது.

### 2.2 வருமான முகாமைத்துவம்

#### 2.2.1 வருமான சேகரிப்பு செயலாற்றல்

சபையினால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் என்பவற்றிற்கிடையில் குறிப்பிடத்தக்க வேறுபாடு அவதானிக்கப்பட்டுள்ளது.

| வருமான விடயம் | பாதீடு (ரூபா) | உண்மை (ரூபா) | நிலுவை (ரூபா) | வீதம் |
|---|---|---|---|---|
| வாடகைகள் | 7,022,000 | 8,921,915 | 1,899,915 | 27 |
| உரிமங்கள் | 503,500 | 1,874,720 | 1,371,220 | 272 |
| சேவைகளுக்கான கட்டணங்கள் | 3,105,850 | 6,277,565 | 3,171,715 | 102 |
| குற்றப்பணங்களும் தண்டங்களும் | 3,645,000 | 7,414,672 | 3,769,672 | 103 |
| ஏனைய வருமானங்கள் | 4,428,999 | 1,959,631 | (2,469,368) | (56) |
| அரசிறை மானியம் | 28,660,556 | 22,970,711 | (5,689,845) | (20) |
| | **47,365,905** | **49,419,214** | **2,053,309** | |

#### 2.2.2 கடை வாடகை

மீளாய்வாண்டின் கணக்கறிக்கையில் மாந்தை மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட சந்தைக்கடை மற்றும் இறைச்சிக்கடைகளில் இருந்து ரூபா 13,131,313 வருமதியாகக் காணப்பட்ட போதிலும் 10/06/2017 வரை ரூபா 2,289,137 அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.3 ஏனைய வருமானம்

மாந்தை மேற்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் 411 வீடுகள் கட்டுவதற்கான படிவங்கள் பிரதேச சபையில் பெற்றுக்கொள்ளப்பட்ட போதிலும்செயன்முறைக் கட்டணம் ரூபா 863,100 அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு செயற்றிறனின்மை

(அ) மீளாய்வாண்டின் கணக்கறிக்கையில் ரூபா 10,725,000 ஆனது 19 வேலைகளிற்காக ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் 10/06/2017 வரை 15 வேலைகளிற்கான ரூபா 9,425,000 பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மாந்தை மேற்கு பிரதேச சபையில் செயலாளர், உள்ளக்க கணகக்காய்வாளர் விடய அலுவலர்கள் மற்றும் வருமான பரிசோதகர்கள் காணப்படுகின்ற போதிலும் நிர்வாக வினைத்திறன் இன்மையால் பின்வரும் வாருமானங்களை அறவீடு செய்வதில் தொய்வு நிலை காணப்படுகின்றது. (விபரம் பின்வருமாறு)

| இல | விபரம் | தொகை (ரூபா) |
|---|---|---|
| --- | ------- | ------- |
| 01 | சந்தைக்கடை மற்றும் இறைச்சிக்கடை வருமானம் | 1,515,201 |
| 02 | வீட்டுத்திட்ட செயன்முறைக் கட்டணம் | 863,100 |
| 03 | தொலைத் தொடர்பு கோபுர நிலுவை | 400,000 |
| | துவிச்சக்கரவண்டி தகடு | 6,400 |
| | **மொத்தம்** | **2,784,701** |

## 3.2 சொத்து முகாமைத்துவம்

(அ) மீளாய்வாண்டில் பிரதேச சபையினால் பயன்படுத்தப்பட்டு வரும் KX 4729 இலக்க வாகனமானது 08/ஏப்ரல்/2015 ஆம் திகதியில் நகரசபை மன்னாரினால் பயன்படுத்தப்பட்ட போது 40 லீற்றர் பெற்றோல் கொள்வனவு செய்யப்பட்டு வாகன ஓட்டப் பதிவேட்டில் பதியப்பட்ட போதிலும் வாகன நுகர்வுக் கணக்கில் உள்வாங்கப்படாமையால் சபைக்கு ரூபா 4,680 தொகை நட்டம் ஏற்பட்டுள்ளது.

(ஆ) மீளாய்வாண்டில் ZA 4595 எனும் இலக்க பெக்கோ லோடரிற்க்கு 591 லீற்றர் டீசல் ரூபா 56,212 பெறுமதியான எரிபொருளானது வாகன ஓட்ட அட்டவணைகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.3 திண்மக்கழிவு முகாமைத்துவம்

சபையின் எல்லைப்பரப்பிலிருந்து அகற்றப்படுகின்ற குப்பை கூளங்களை எரித்தல் மற்றும் புதைத்தல் செயற்பாடுகள் மட்டுமே சபையால் மேற்கொள்ளப்பட்டிருந்தனவேயன்றி கொம்பொஸ்ட் மற்றும் மீள்சுழற்சி செயற்திட்டங்களைக் கொண்ட திண்மக்கழிவு முகாமைத்துவத்தைச் செயற்படுத்த ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எவையும் சபையினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 4. நல்லாளுகையும் கணக்களி பொறுப்பும்

## 4.1 நிதிகூற்றுக்களை சமர்ப்பித்தல்

பரீட்சைமீதி மற்றும் வருமான செலவினக் கணக்குகளில் ''ரூபா'' குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

## 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டில் வரவு செலவுத் திட்டத்தின் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்ட 26 தலைப்புகளிற்கான கூட்டுமொத்தத் தொகையான ரூபா 7,254,350 செலவினங்களின் ஒதுக்கீடுகள் 40 வீதம் தொடக்கம் 100 வீதம் வரை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4.3 பதிலளிக்கப்பட்டிராத கணக்காய்வு ஐயவினாக்கள்

-------------------------------------------------------------

மீளாய்வாண்டில் NNP/MN/A/PS/MW/FA/2015/AQ21 எனும் இலக்க கணக்காய்வு ஐயவினா எம்மால் விடுவிக்கப்பட்டிருந்தது. அதற்காக அளிக்கப்பட்ட விளக்கம் ஏற்றுக்கொள்ளப்படாத சந்தர்ப்பத்தில் பிராந்திய உள்ளூராட்சி அலுவலகத்தில் பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளருடனான கவந்துரையாடலின் போது தங்களால் குழு ஒன்று அமைக்கப்பட்டு பதில் அளிக்கப்படும் என்று கூறப்பட்ட போதிலும் 10 யூன் 2017 வரை எந்தவித பதிலும் தரப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

------------------------------------------

பின்வரும் விடயங்களில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது

(அ) வருமானச் சேகரிப்பு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) பெறவேண்டிய கணக்குகள்
(ஈ) களஞ்சியக் கட்டுப்பாடு
(உ) கணக்கீடு